மேற்கு வங்கத்தை தொடர்ந்து

# கடலரிப்பில் புதுச்சேரிக்கு இரண்டாவது இடம்

சின்னஞ்சிறிய மாநிலமான புதுச்சேரிக்கு அழகே அதன் கடற்கரைகள்தான். கடந்த சில ஆண்டுகளாக ஏற்படும் கடலரிப்பின் கோர முகத்தால் தனித்துவமிக்க கடற்கரை பகுதிகள் கபளீகரம் ஆகி வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரமும், சுற்றுலாவும் கடுமையாக பாதிக்கப்படுகிறது. ஒரு பக்கம் கற்களை கொட்டி தடுப்பு நடவடிக்கை, மற்றொரு புறம், கடலரிப்பால் பல பகுதிகள் காணாமல்போகிறது. சின்னவீராம்பட்டினம், நல்லவாடு, பிள்ளைச்சாவடி, சின்னகாலாப்பட்டு, காலாப்பட்டு பகுதிகளில் ஏற்படும் கடலரிப்பால், மீன்பிடி வலை பின்னும் கூடம், மீனவர்களின் வீடுகள், சாலைகள், மின்சார கட்டமைப்புகள் என அனைத்தும் கடலுக்குள் இழுத்து செல்லப்பட்டுள்ளன. கடலரிப்பு தொடர்ந்தால் கிழக்கு கடற்கரை சாலையே காணாமல் போகக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர். தேசிய கடலோர ஆராய்ச்சி மையம் தனது அறிக்கையில், இந்தியாவில் கடலரிப்பு அதிகம் ஏற்படும் மாநிலங்களில் 57 சதவீதத்துடன் புதுச்சேரி இரண்டாவது இடத்தில் உள்ளது. 63.5 சதவீதத்துடன் மேற்கு வங்கம் முதலிடத்திலும், கேரளா 45 சதவீதமும், தமிழகம் 41 சதவீதம் கடலரிப்பால் பாதிக்கப்படுவதாக தெரிவித்துள்ளது. 1990 முதல் 2016ம் ஆண்டு வரையில் புதுச்சேரியில் 57 சதவீதம் கடலோர பகுதிகள் அழிந்துவிட்டது. மீதமுள்ள 35 சதவீத பகுதிகள் நிலையானதாகவும், 8 சதவீதம் கடலரிப்பு மெல்ல உருவாகி வருவதாகவும் தெரிவித்துள்ளது.

கடலரிப்பை தடுக்கும் செயற்கை கட்டமைப்புகளால், மற்றொரு பகுதிகளில் கடலரிப்பு அதிகரிக்கிறது. புதுச்சேரி கடற்கரை பகுதிகளில் 100 மீட்டர் கடலுக்குள் சென்றுவிட்டது. இது இங்கு மட்டுமல்லாமல் இந்தியா முழுவதிலும் கடலரிப்பு மெல்ல அதிகரிக்கிறது. வெப்பமயமாதல், பருவநிலை மாற்றத்தால் பல நாடுகள் இத்தகைய பிரச்னைகளை சந்திக்க ஆரம்பித்துள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதற்கான தீர்வும் உலகளாவிய அளவில் இருக்க வேண்டும். சுற்றுச்சூழலை பாதிக்காத மென்மையான பொறியியல் திட்டங்கள் மூலமாக மணலை ஒரே இடத்தில் குவிய வைத்து கடலரிப்பை தடுப்பதற்கான ஆராய்ச்சிகள் துவங்கியிருக்கிறது. புதுச்சேரி கடற்கரை பகுதிகள் அதிகளவில் பாதிக்கப்படுவதற்கு கடந்த கால தவறுதான் காரணம் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். குறிப்பாக 1989ம் ஆண்டு புதுச்சேரி மீன்பிடி துறைமுக விரிவாக்க பணிகளை அரசு மேற்கொண்டவுடன், பாதிப்புகள் அதிகரிக்க துவங்கிவிட்டது. புதுச்சேரி அரசானது வம்பாகீரப்பாளையம், வீராம்பட்டினம் என இரண்டு பக்கம் கடலில் தடுப்பு சுவர்களை அமைத்தது.

இது இயற்கையாக தெற்கு பக்கமிருந்து வடக்கு பக்கம் நடைபெறும் மணல் நகர்வை முற்றிலுமாக தடுத்து நிறுத்தியது. முகத்துவாரத்தில் அள்ளப்படும் மணலை தெற்கு பக்கம் கொட்டி வடக்கு பக்கம் தொடர்ச்சியாக மணல் நகர்வை செய்வதன் மூலம் கடலரிப்பு மட்டப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் இதனை அப்போது செய்யாததும் கடலரிப்புக்கு காரணமாகிவிட்டது.

## கபளீகரமாகும் கடற்கரை கிராமங்கள்



## ஜி டியூப் முறை

புதுச்சேரி சட்டசபையில் கடலரிப்பை தடுக்க நவீன தொழில்நுட்பமான ஜி டியூப் முறை பயன்படுத்தப்படவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. இதனை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வரமுடியாது. அதோடு கடலரிப்பின் வேகம் அதிகமாக உள்ளதால், உடனடியாக கற்களை கொட்டி தடுத்தாக வேண்டும். தற்காலிக நடவடிக்கையாக கடற்கரை பகுதியில் கற்கள் கொட்டப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. கடலரிப்பின் வேகம் அதிகரித்துள்ளதால் புதுச்சேரி பகுதிகளுக்கு இடையே தமிழக பகுதிகளும் இடையிடையே வருவதால் ஒரு பொதுவான தீர்வு காண வேண்டியது அவசியமாகிறது. சுற்றுச்சூழலை பாதிக்காமலும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் வகையிலும் ஒரு விரிவான ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மைத் திட்டத்தை அரசு தயாரிக்கவுள்ளது. மத்திய புவி அறிவியல் மையம் அளிக்கும் அத்திட்டத்தை புதுச்சேரி அரசு விரைவாக நிறைவேற்றி மீனவர்களின் நலனை பாதுகாக்கும்.

## பருவமழைக்கு முன்னதாக பணி

இதுகுறித்து பாதிக்கப்பட்ட மீனவர்களிடம் கேட்டபோது: கடலரிப்பால் மீன்வலை பின்னும் கூடம், வீடுகள், சாலைகள், மின் கம்பங்கள் கடலுக்குள் இழுத்து செல்லப்பட்டது. எங்களது வாழ்வாதாரமே கடல்தான். கடலையொட்டி வசிக்க வேண்டிய நிலைதான் எங்களுக்கு உள்ளது. வடகிழக்கு பருவமழை மற்றும் புயல் நேரங்களில் அதிக கடலரிப்பு ஏற்படுகிறது. வரும் பருவமழைக்கு முன்னதாக கருங்கல் சுவர் அமைக்கும் பணியை முடிக்க வேண்டும். அப்போதுதான் இருக்கும் வீடுகளையும், உடமைகளையும் காக்க முடியும், என்றனர்.

## பருவநிலை மாற்றமே கடலரிப்புக்கு காரணம்

இதுகுறித்து இந்திய கடலோர ஆராய்ச்சி மையத்தின் அதிகாரிகள் கூறுகையில், புதுச்சேரியின் கடலரிப்பை தடுக்க ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மை திட்டம் அவசியம். இதில் கிடைக்கும் தரவுகளான நிலத்தகவமைப்பு, கடற்கரை பகுதிகளில் அமைந்திருக்கும் சூழல், கடல் மட்டம், அலைகளின் அளவு, வேகம், மணல் படியும் திறன், எந்தெந்த பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து பணிகளை செய்வது போன்றவற்றின் மூலம் கடலரிப்பை தடுக்கலாம். கடந்த 2018ம் ஆண்டு செயற்கை மணற்பரப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு நிதியின் கீழ் செயற்கை தடுப்பு சுவர் ஒன்றை வெற்றிகரமாக கடலுக்குள் நிறுவப்பட்டது.

இதன் மூலம் அலைகள் வேகம் குறைக்கப்பட்டு, மணல் வடக்கு நோக்கி குவிவதைச் செய்ததன் மூலமாக தெற்கு பக்கத்தில் கடற்கரை கிடைத்திருப்பதோடு கடலரிப்பு தடுக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழகப்பகுதியான பொம்மையார்பாளையம் பகுதியில் கற்களால் செயற்கை சுவர் அமைக்கப்பட்டதன் விளைவாக வடக்கு பக்கத்தில் கடலரிப்பு அதிகரித்திருக்கிறது. பருவநிலை மாற்றத்தால் இந்தியா முழுவதும் கடலரிப்பு அதிகரிக்கிறது.

இதனை தடுக்க ஒருங்கிணைந்த திட்டமும், அதற்கான தொழில்நுட்பமும் தேவை. இதனை செய்யும்போது இழந்த பகுதிகள் மீண்டும் கிடைக்கும் என்றார்.

## தேர்தல் முடிந்தவுடன் பணி துவங்கும்

இதுகுறித்து கல்யாணசுந்தரம் எம்எல்ஏவிடம் கேட்டபோது: புதுச்சேரியில் எனது தொகுதியான கனகசெட்டிக்குளம், பிள்ளைச்சாவடி, சின்னகாலாப்பட்டு, பெரிய காலாப்பட்டு ஆகிய பகுதிகளில் கடலரிப்பு பாதிக்கப்பட்டுள்ளது. மீனவ மக்களின் நலன் கருதி ரூ.40 கோடி அளவுக்கு 6 இடங்களில் கடல் சுவர் அமைக்கும் பணிக்கான பூமி பூஜை போடப்பட்டுள்ளது. தமிழகத்தில் பொம்மையார்பாளையம் பகுதியில் செயற்கையான தூண்டில் முள் வளைவு அமைக்கப்பட்டதன் விளைவாக, புதுச்சேரியில் ஏற்படும் கடலரிப்பை தடுக்க நீண்டகால திட்டத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் முடிந்தவுடன் பணிகள் விரைவுபடுத்தப்படும். இதன்மூலம் கடலரிப்பு நிச்சயமாக தடுக்கப்படும், என்றார்.

தினத்தந்தி dt: 16.04.2024